DMC/JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| C.C.No.44 /2025, Kunnam P.S. PW -1. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தம்மாள் | Caste | : | - |
| Father/ Husband Name | : | பெரியசாமி | Calling | : | விவசாயம் |
| Village | : | பெரியம்மாபாளையம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 70/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 02.02.2026. | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த ஆண்டு தை மாதம் ஆங்கில 17 ம் தேதி அன்று நான் என் வீட்டில் இரவு 12.30 மணியளவில் படுத்து உறங்கி கொண்டிருந்தேன். அப்போது யாரோ ஒரு நபர் என் கழுத்தை அழுத்தி கல்லால் தலையில் குத்தினார்கள். நான் இழுத்து தடுத்தேன். அந்த நபர் கையில் அணிந்திருந்த மணி அறுந்து போய்விட்டது. பின்னர் யார் என்று பார்த்தபோது அது அழகேஸ்வரியாக இருந்தார். எதிரி ஜாடைமாடையாக திட்டுவார். நான் அமைதியாக இருந்து விடுவேன். பின்னர் என் நெற்றி பகுதியில் ஏற்பட்ட காயம் குறித்து அரியலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அப்போது போலிசார் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று கைரேகை பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள **கைரேகை மற்றும் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி அங்கிருந்து செல்லும்போது அவர் ஒன்றும் சொல்லவில்லை. நானும் அரியலூர் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. எதிரி எனது உறவினரா என்றால் இல்லை. என்னுடைய வீடும் எதிரியின் வீடும் பக்கத்து பக்கத்து வீடா என்றால் இல்லை. அவர் வீடு என் வீட்டிலிருந்து 3 வீடு தள்ளி உள்ளது. நான் எனது வீட்டில் தனியாகதான்

இருப்பேனா என்றால் சரிதான். ஒரு வீடு தள்ளி எனது மகன் வீடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். சம்பவம நடந்த நேரம் இருட்டான நேரம் என்பதாலும், அவருக்கும் எனக்கும் முன்விரோதம் இருந்ததால் அவர்தான் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியும் நானும் பேசிக்கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். எதிரி உடல் நிலை சரியில்லாமல் தினமும் மாத்திரை போடும் விபரம் மற்றும் அவ்வாறு மாத்திரை போட்டால் அவர் தூங்கி விடுவார் என்ற விபரமும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ நேரம் இருட்டாக இருந்ததால் நான் இவர் தான் எதிரி என்று பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்ல சொல்ல அவர்கள் தான் புகார் எழுதினார்கள். புகாரை நான் எப்போது கொடுத்தேன் என்றால் பொங்கல் கரிநாள் மறுநாள் 17 ம் தேதி கொடுத்தேன். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதிற்கிணங்க வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் இருந்த முன்விரோதத்தினால் அவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** –இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUM COURT, KUNNAM